பக்கங்கள் 18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 29 வெள்ளிக்கிழமை 15.11.2024 | அதிர்வு 105



## வடக்கையும் கைப்பற்றி

# தேசிய ரீதியில் அநுரவின் கட்சி பெரு வெற்றி!

### தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கி படுவீழ்ச்சி

இலங்கையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில், திசைகாட்டிச் சின்னத்தில் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தி, தேசிய ரீதியில் வரலாறு காணாத பெரு வெற்றியீட்டி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோட்டையாகத் திகழ்ந்த வடக்கு மாகாணத்திலும் தேசிய மக்கள் சக்தியே வெற்றிவாகை சூடி வருகின்றது.

அதற்கமைய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி, சுயேச்சைக் குழு 17 (அர்ச்சுனா அணி), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) என்பன தலா ஒவ்வொரு ஆசனங்களையும் பெறும் என்று தெரியவருகின்றது.

03 ▶









தமிழ் தேசியம் பற்றிக் குரல் எழுப்பி வந்த தமிழ்க் கட்சிகள் தங்களின் ஒற்றுமையின்மை மற்றும் சாத்தியப்படக் கூடிய திட்டம் ஏமில்லாமல் வெறுமனே தேசியம் பற்றிய கோஷத்தோடு அரசியல் நடத்தியமை ஆகியவற்றின் பெறுபேறு யாது என்பதை நேரில் பட்டறியும் நிலையை இந்தத் தேர்தல் முடிவுகள் – குறிப்பாக யாழ் மற்றும் வன்னி மாவட்ட தேர்தல் முடிவுகள் – தந்திருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

இந்தத் தேர்தல் முடிவில் இருந்தும் அவர்கள் பாடம் படித்துத் திருந்துவார்கள் என்று நம்புவதற்கு இடமில்லை.

இந்தத் தேர்தல் முடிவை வைத்துக்கொண்டு ஒரு கட்சியில் தோற்றவர் குறித்து புளகாங்கிதம் அடைத்து ஆரவாரம் பண்ணுவது இப்போது அடுத்த கட்ட நகர்வாக இருக்கும். முகப்புத்தகம் உட்பட ஊடகங்கள் யாவற்றிலும் இப்போது முதல் இதுதான் – தனிநபர் மீது சேறு வாரி இறைத்தல்தான் – பேசு பொருளாக இருக்கும்.

இனிமேலாவது தமிழ்த் தேசியத்தை கட்டுறுதியாக பேணுவதற்கு எவ்வாறு ஒன்றுபட்டு செயற்படலாம் என்பது பற்றி இந்தத் தரப்புகள் எல்லாம் சிந்திக்குமா என்பது கேள்விக்குரியதாக நீடிக்கும் என்றே தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் – குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் – விருப்பமும் எதிர்பார்ப்பும் தமிழ்த் தேசியம் கடந்த விடயங்கள் சார்ந்தவை என்பது ஜீரணிக்க முடியாத உண்மை.

பாவம், இந்த மக்களினதும் தமிழ்த் தேசியத்தினதும் எதிர்காலக் கனவோடு சாவினை அணைத்த நம் வீர மறவர்கள்....!



# நாடாளுமன்றத் தேர்தல் - 2024
# தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

### யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 5,681
- இலங்கைத் தமிழரசுக் கட்சி - 4,808
- சுயேச்சைக் குழு 17 (அர்ச்சுனா அணி) - 3,548
- அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் - 2,623
- ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - 1,885
- தமிழ் மக்கள் கூட்டணி - 1,756
- ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி - 1,599
- ஐக்கிய மக்கள் சக்தி - 776
- புதிய ஜனநாயக முன்னணி - 425

### வன்னி தேர்தல் மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 4,371
- இலங்கைத் தமிழரசுக் கட்சி - 2,349
- ஐக்கிய மக்கள் சக்தி - 1,825
- ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி - 1,399
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 634
- அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் - 502
- ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - 287
- புதிய ஜனநாயக முன்னணி - 425

### திருகோணமலை மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 9,705
- ஐக்கிய மக்கள் சக்தி - 2,853
- இலங்கைத் தமிழரசுக் கட்சி - 1,749
- புதிய ஜனநாயக முன்னணி - 382
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 140

### மட்டக்களப்பு மாவட்டம்
- இலங்கைத் தமிழரசுக் கட்சி - 5,236
- தேசிய மக்கள் சக்தி - 3,412
- ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி - 1,756
- தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் - 1,383
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,019
- ஐக்கிய மக்கள் சக்தி - 914

### அம்பாறை மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 17,316
- ஐக்கிய மக்கள் சக்தி - 2,272
- இலங்கைத் தமிழரசுக் கட்சி - 1,899
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,599
- புதிய ஜனநாயக முன்னணி - 1,326
- அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் - 1,008

### கொழும்பு மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 28,475
- ஐக்கிய மக்கள் சக்தி - 2,985
- புதிய ஜனநாயக முன்னணி - 1,814
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 934

### புத்தளம் மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 11,404
- ஐக்கிய மக்கள் சக்தி - 1,661
- புதிய ஜனநாயக முன்னணி - 672
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 454

### பொலனறுவை மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 16,052
- ஐக்கிய மக்கள் சக்தி - 2,184
- புதிய ஜனநாயக முன்னணி - 425
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 230

### மொனராகலை மாவட்டம்
- தேசிய மக்கள் சக்தி - 19,686
- ஐக்கிய மக்கள் சக்தி - 3,297
- புதிய ஜனநாயக முன்னணி - 833
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 650



# நாடாளுமன்றத் தேர்தல் – 2024 தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

### மாத்தளை மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 17,123
- ஐக்கிய மக்கள் சக்தி – 2,201
- புதிய ஜனநாயக முன்னணி – 954
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 637

### நுவரெலியா மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 13,937
- ஐக்கிய மக்கள் சக்தி – 2,477
- ஐக்கிய தேசியக் கட்சி – 1,660
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 303
- ஐக்கிய ஜனநாயகக் குரல் – 201

### கண்டி மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 44,819
- ஐக்கிய மக்கள் சக்தி – 4,698
- புதிய ஜனநாயக முன்னணி – 2,770
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 928

### பதுளை மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 33,780
- ஐக்கிய மக்கள் சக்தி – 3,866
- புதிய ஜனநாயக முன்னணி – 2,227
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 675

### இரத்தினபுரி மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 24,776
- ஐக்கிய மக்கள் சக்தி – 2,969
- புதிய ஜனநாயக முன்னணி – 1,528
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 1,031

### கேகாலை மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 28,031
- ஐக்கிய மக்கள் சக்தி – 3,513
- புதிய ஜனநாயக முன்னணி – 2,056
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 662

### அம்பாந்தோட்டை மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 17,326
- ஐக்கிய மக்கள் சக்தி – 1,623
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 1,293
- புதிய ஜனநாயக முன்னணி – 774

### மாத்தறை மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 24,954
- ஐக்கிய மக்கள் சக்தி – 2,692
- புதிய ஜனநாயக முன்னணி – 1,823
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 548

### களுத்துறை மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 29,076
- ஐக்கிய மக்கள் சக்தி – 3,340
- புதிய ஜனநாயக முன்னணி – 1,913
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 1,160

### காலி மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 32,296
- ஐக்கிய மக்கள் சக்தி – 3,523
- புதிய ஜனநாயக முன்னணி – 1,846
- சர்வஜன அதிகாரம் – 607

### அநுராதபுரம் மாவட்டம்

- தேசிய மக்கள் சக்தி – 43,030
- ஐக்கிய மக்கள் சக்தி – 6,275
- புதிய ஜனநாயக முன்னணி – 2,146
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 876

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தேசிய ரீதியில்...**

இதேவேளை, வன்னி தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் காதர் மஸ்தானின் கட்சி என்பன தலா ஒவ்வொரு ஆசனங்களையும் பெறும் என்றும் தெரியவருகின்றது.

தபால் மூல வாக்களிப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தைத் தவிர ஏனைய தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தியே முதலிடம் வகிக்கின்றது.

தபால் மூல வாக்களிப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னிலை வகிக்கின்றது. அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் இறுதித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியே வெற்றியடையும் என்றும் தெரியவருகின்றது. 5 ஆசனங்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 3 ஆசனங்களைக் கைப்பற்றும் என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி அதிக வாக்குகளைப் பெற்றிருப்பதால் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆசனம் கிடைப்பது கடினம் என்றும் தெரியவருகின்றது.

தேசிய ரீதியிலான இறுதித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தி மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நெருங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய வாய்ப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தமக்குக் கிடைத்த வெற்றியை நாடாளுமன்றத்திலும் உறுதிப்படுத்துவதற்காக தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து, பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

ஜனாதிபதித் தேர்தலில் கிட்டிய மாற்றத்தை பொதுத் தேர்தலிலும் சுவீகரிப்பது அவரின் திட்டமாக - எதிர்பார்ப்பாக - இருந்தது.

அவரது அந்தத் தந்திரோபாயம் நன்கு வேலை செய்திருக்கின்றது.

தெற்கில் மட்டுமல்ல, வடக்கு - கிழக்கிலும் கூட, அவரின் கட்சிக்குச் சார்பாகக் காற்று நன்கு வீசி இருக்கின்றது.

தமிழர் தாயகத்திலும் ஆழக் காலூன்றிய தென்னிலங்கைக் கட்சி என்ற வலிமையான நிலைமையோடு தன் ஆட்சி அதிகாரத்தை விரித்து இருக்கின்றது ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி.

நேற்றுப் பொதுத்தேர்தல் நடந்து முடிந்து வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பித்தமை தொடக்கம் தேசிய மக்கள் சக்தியின் காட்டில் நல்ல மழை என்பது துலாம்பரமாகிவிட்டது. முதலில் வெளியாகத் தொடங்கிய தபால் மூல வாக்களிப்பு, தேசிய மக்கள் சக்தி எதிர்பார்த்த - வலியுறுத்திக் கோரிய - மாற்றத்திற்கு மக்கள் அங்கீகாரம் வழங்கி விட்டார்கள் என்ற செய்தியை வெளிக்கொண்டு வரத் தவறவில்லை.

முழு நாட்டிலும் ஜனநாயகக் காற்று தேசிய மக்கள் சக்தி கோரிய மாற்றம் என்ற திசையை நோக்கி சூறாவளியாக மாறிவிட்டது எனக் கருதக்கூடிய நிலையை தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தி நிற்கின்றன.

ஆயினும், இந்தத் தேர்தல் வெற்றியை தேசிய மக்கள் சக்தியும் அதன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட தலைவர்களும் மிக அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் கையாள வேண்டும் என்பது முக்கியம்.

கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இதிலும் விட அதிகமான பெருவெற்றியை ஜனாதிபதித் தேர்தலிலும், அதன் பின்னர் வந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது பொதுஜன பெரமுன கட்சிக்கும் இலங்கை மக்கள் வழங்கினார்கள் என்பதை இன்று வெற்றி வாகை சூடி இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் மறந்து விடக்கூடாது.

அன்று அந்தப் பக்கம் பலமாக வீசிய ஜனநாயகக் காற்று இன்று 'மாற்றம்' கண்டு தேசிய மக்கள் சக்தி பக்கம் வீசுகின்றது.

அன்று கோட்டாபயவுக்கும் அவரது மொட்டுக் கட்சிக்கும் பெருவெற்றியை வாரி வழங்கிய இலங்கை மக்கள், இரண்டு, இரண்டரை வருடங்களில், அதே ஜனாதிபதியை நாட்டை விட்டு ஓட ஓடத் துரத்தி அடித்தார்கள் என்பதும் மொட்டுக் கட்சி அரசு நிலை குலைந்து போனது என்பதும் மறக்கக் கூடிய அனுபவங்கள் அல்ல.

ஆக, இப்போது தேசிய மக்கள் சக்தி கோரிய 'மாற்றம்' என்ற வேண்டுகோளை ஏற்று அங்கீகரித்த இலங்கை மக்கள், தேசிய மக்கள் சக்தி அதன் செயற்பாட்டில் நீதி, நியாயம், நம்பிக்கை, திறமையான நிர்வாகம் போன்ற விடயங்களில் சறுக்குமானால், தங்களின் தற்போதைய மாற்றம் பற்றிய முடிவை மாற்றிக் கொள்ளவும், கோட்டாபய அரசுக்கு ஏற்பட்ட கதியை தேசிய மக்கள் சக்திக்கும் வழங்கவும் பின்னிற்க மாட்டார்கள் என்பதை தற்போதைய ஜனாதிபதியும், இனிப் பதவியேற்க இருக்கும் அவரின் புதிய அரசும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முன்னைய தென்னிலங்கை அரசுகளுக்குக் கிட்டாத ஒரு பெருவாய்ப்பு அநுரகுமார திஸநாயக்கவின் அரசுக்குக் கிடைத்து இருக்கின்றது. அது - தமிழர் தாயகத்திலும் அந்த அரசுக்கு கணிசமான - குறிப்பிடத்தக்க - செல்வாக்கும் அங்கீகாரமும் கிட்டி இருப்பதாகும்.

அதை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதும் அல்லது தென்னிலங்கை அரசுகளின் வழமையான பரவணி பழக்கம் போல அத்தகைய வாய்ப்புக்களையும் போட்டடிப்பதும் தேசிய மக்கள் சக்தியின் கைகளில்தான் உள்ளது.

# பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



"ஆளும் தரப்புக்கு புதியவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதை போன்று எதிர்க்கட்சிக்கும் புதியவர்களை தெரிவு செய்ய வேண்டும். சிறந்த மற்றும் பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும்."

- இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு - மிரிஹான பகுதியில் நேற்று வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமக்கு பதவி முக்கியமல்ல, பலமான நாடாளுமன்றத்தை அமைப்பதையே எதிரர்பார்த்துள்ளோம். பெரும்பான்மை பலம் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக உள்ளது. பதவிகள் தொடர்பில் எமது அணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது.

10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் வியாழக்கிழமை கூடும். ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் முன்வைத்த கொள்கைத் திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்துவோம். உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

புதியவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புமாறு நாங்கள் குறிப்பிடும் போது எதிர்தரப்பினர் பழையவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பழையவர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை ஆராய வேண்டும்.

அத்துடன் அனுபவமில்லாதவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப கூடாது என்று குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. அரச நிதியை மோசடி செய்த அனுபவமும், நாடாளுமன்றத்தில் முறையற்ற வகையில் செயற்பட்ட அனுபவமும் எமக்கு கிடையாது.

ஆளும் தரப்புக்கு புதியவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதை போன்று எதிர்க்கட்சிக்கும் புதியவர்களை தெரிவு செய்ய வேண்டும். சிறந்த மற்றும் பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும்."- என்றார்.



# தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இரு வேட்பாளர்கள் உட்பட 41 பேர் கைது

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 41 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கைது செய்யப்பட்டவர்களில் கற்பிட்டி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடும் இரு வேட்பாளர்களும் உள்ளடங்குகின்றனர்.

சட்டவிரோதமாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடல், தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுதல், வாக்குச் சீட்டுகளை புகைப்படம் எடுத்தல் மற்றும் வன்முறை செயல்களில் ஈடுபடல் ஆகிய குற்றங்கள் தொடர்பிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தேர்தல் நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக செயற்பட்ட அதிகாரிகள் சிலர் வாக்கெடுப்பு நடவடிக்கைகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்."- என்றார்.



# யாழ். மத்திய கல்லூரியில் வாக்கெண்ணும் நிலையத்தில் கலகத்தடுப்பு பொலிஸார்

நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குகள் எண்ணும் பணி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணும் நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது, வன்முறைகளை தடுப்பதற்காக பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அதி தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அத்துடன், கலகத் தடுப்பு பொலிஸாரும் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.





# 61,767 சுற்றுலாப்பயணிகள் 10 நாள்களில் வருகை

இந்த மாதத்தின் கடந்த 10 நாள்களில் மாத்திரம் 61,767 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 16,82,482 பேர் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து 15,197 பேரும், ரஷ்யாவில் இருந்து 9,680 பேரும், ஜேர்மனியிலிருந்து 4,899 பேரும் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# மீன்பிடி படகில் 60 கிலோகிராம் போதைப்பொருளுடன் 6 பேர் கைது

இலங்கைக்கு மேற்கே ஆழ்கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் பல நாள் மீன்பிடி படகுடன், சந்தேக நபர்கள் 6 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பல நாள் மீன்பிடி படகில் 60 கிலோகிராம் போதைப்பொருள் இருந்ததாகச் சந்தேகிக்கப்படுவதாக இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

கைதான சந்தேக நபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கரைக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.



# சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடித்த ஐவர் கைது

கடற்படையினரால் மன்னார் வங்காலை மற்றும் சிலாவத்துறை கடற்பகுதியில் நடாத்தப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது கடலட்டைகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் சட்டவிரோதமான முறையில் சுழியோடிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 1055 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில், இலங்கை கடற்படையின் வழக்கமான தேடுதல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நாட்டைச் சுற்றியுள்ள கடலோர மற்றும் கடற்பகுதிகளில் ரோந்துப் பணிகளில் நேற்றுமுன்தினம் இரவு ஈடுபட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களையும் மற்றும் பிடிக்கப்பட்ட கடலட்டைகளையும் மேலதிக நடவடிக்கைகளுக்காக மன்னார் உதவி கடற்றொழில் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் இலங்கை கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.



# சட்டவிரோத பிரசார செயற்பாடுகளில் ஈடுபட்ட 4 பேர் பொலிஸாரால் கைது

சட்டவிரோத தேர்தல் பிரசார செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்த கைது சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.



# 40 அடி பள்ளத்தில் கவிழ்ந்து பஸ் விபத்து; 3 பேர் உயிரிழப்பு

மாத்தளை – எலவனாகந்த பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர், 39 பேர் காயமடைந்துள்ளனர்.

40 அடி பள்ளத்தில் வீழ்ந்து பஸ் விபத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வஸ்கமுவ தேசிய பூங்காவை பார்வையிடுவதற்காக சுற்றுலா சென்ற குழுவினரே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் வில்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# தேர்தலுக்கு பிந்தைய காலத்தில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை




தேர்தல் முடிவுகள் வெளியான ஒரு வாரத்திற்குத் தேர்தலுக்கு பிந்தைய ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான வாக்குப்பதிவு நேற்று மாலை 4.00 மணியுடன் நிறைவடைந்தது. காலை 7.00 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

அந்த காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, கேகாலை, சீதாவாக்க, கொழும்பு வடக்கு, களுத்துறை, களனி, தெல்தானிய, மாத்தறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தலா இரண்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

# பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட இருவர் தேர்தலின்போது உயிரிழப்பு

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இரண்டு சிவில் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி மூவரும் இயற்கை மரணம் அடைந்திருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய 33 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார்.

மேலும், கெஸ்பேவ பொலிஸ் பிரிவிலுள்ள சிறி சதஹம் பிக்கு மடத்தின் வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரியாக பரிந்துரைக்கப்பட்ட பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கொபேகனே பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையமொன்றில் ஊழியராக கடமையாற்றிய 57 வயதுடைய நபர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த மூவருக்கும் பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இவர்கள் மாரடைப்பு காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வாக்குச்சீட்டைப் படம் எடுத்தவர் வகையாக மாட்டிக் கொண்டார்!

## ஆலங்குடாவில் சம்பவம்

(கற்பிட்டி எம்.எச்.எம். சியாஜ்)

தனது வாக்கைப் புள்ளடியிட்ட பின் அதனைக் கையடக்கத் தொலைபேசியில் படம் பிடித்தவரை பொலிஸார் கைது செய்த சம்பவம் ஒன்று ஆலங்குடா பாடசாலையின் வாக்குச் சாவடியில் இடம்பெற்றுள்ளது.

அவரது கைத்தொலைபேசியையும் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் என நுரைச்சோலைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட நிலைய பொறுப்பதிகாரி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சமூக ஊடகச் செயற்பாட்டாளருக்கு எதிராக பொலிஸ் விசாரணை ஆரம்பம்



பிரபல சமூக ஊடக செயற்பாட்டாளரான அஷேன் சேனாரத்னவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் அதிகாரிகள் சிலர் ஊழல்வாதிகள் என்று அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியமை தொடர்பில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பான வாக்குமூலத்தைப் பெறுவதற்காக கடந்த 12ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு அஷேன் சேனாரத்னவுக்கு தெரிவித்திருந்த போதிலும், அன்றைய தினம் அவர் வருகைத் தராமல் வேறு ஒரு திகதியை கோரியுள்ளார்.

அஷேன் சேனாரத்ன இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவொன்றில் இருந்து வேட்புமனு கோரியிருந்த நிலையில் அது நிராகரிக்கப்பட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதிகாரிகளை சமூக வலைத்தளங்களில் அவர் கடுமையாக விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது.




# சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழு நாளை வரும்

நேற்று பொதுத் தேர்தல் தினத்தன்று இலங்கைக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொள்ளவிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழு, தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளது.

இலங்கையில் பொதுத் தேர்தல் இடம்பெறுவதால் நாளை 16ஆம் திகதியே தமது குழுவின் பயணம் இடம்பெறும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இலங்கையின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வைப் பற்றி கலந்துரையாடல்களை நடத்த சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று நேற்றுப் 14ஆம் திகதி இலங்கைக்கு வருவதாக அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியிருந்தது.

என்றாலும், பொதுத் தேர்தல் காரணமாக இரண்டு நாள்கள் அந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், நாளை இந்தப் பயணம் இடம்பெறும் என உத்தியோகப்பூர்வமாக அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் தலைமையிலான குழு கடந்த மாதம் 4ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்து பல்வேறு சந்திப்புகளை நடத்தியிருந்தது.

இந்த கலந்துரையாடல்களின் பின்னர் வொஷிங்டனில் நடத்திய ஊடகச் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட கிருஷ்ணா சீனிவாசன், மூன்றாம் கட்ட மதிப்பாய்வுக்காக விரைவில் இலங்கை செல்லவுள்ளனர் எனக் கூறினார். இதன் பிரகாரமே நேற்று இந்தப் பயணம் இடம்பெறவிருந்தது.

விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கையின் பொருளாதார சீர்திருத்த திட்டங்கள், பொருளாதார மற்றும் நிதிக் கொள்கை அமுலாக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் பாராட்டுகளை தெரிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# உரும்பிராய் விபத்தில் நேற்று வயோதிபப் பெண் படுகாயம்



யாழ்ப்பாணம் உரும்பிராயில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பலாலி வீதி, உரும்பிராய் காளி கோவிலுக்கு அருகாமையில் நேற்றுக் காலை இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் வீதியால் நடந்து சென்ற வயோதிப பெண்ணை அவ் வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த வயோதிப பெண்ணை வாகனத்தை நிறுத்தி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு எவரும் முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்தில் நின்றிருந்தவர்களோ அல்லது அவ்வீதியால் பயணித்த பொதுமக்களோ எவரும் முன்வராத நிலையில் இராணுவத்தினரே உதவி செய்துள்ளனர்.

அவ் வீதியால் வந்த இராணுவத்தினரின் உதவியுடன் இராணுவ அம்புலன்ஸில் படுகாயமடைந்த வயோதிப பெண் ஏற்றிச் செல்லப்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு உள்ளார் எனத் தெரிய வருகிறது.

# தேர்தல் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரின் மீது தாக்குதல்!

## பொகவந்தலாவ பகுதியில் நேற்றுச் சம்பவம்



**(க.கிஷோந்தன்)**

2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு செய்தி சேகரிக்கச் சென்ற பொகவந்தலாவ பிரதேச பிராந்திய ஊடகவியலாளர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்தார். அவர்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பலவற்றின் பிராந்திய நிருபராகப் பணிபுரியும் பொகவந்தலாவ எஸ்.சதீஸ்குமார் கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்குள்ளாகி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவ கெக்கர்ஸ்வோல்ட் இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் நேற்றுப் பிற்பகல் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும், நபர் ஒருவர் தனக்குப் பின்னால் வந்து அருகில் கடையொன்றில் இருந்து கத்தியை எடுத்து தனது தலையில் தாக்கியதாக சதீஸ்குமார் தெரிவித்தார். மேலும், சம்பந்தப்பட்ட சந்தேக நபர் மதுபோதையில் இருந்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய ஜனநாயகக் குரல் வேட்பாளரின் ஆதரவாளரே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், இது தொடர்பில் பொகவந்தலாவ பொலிஸில் தாம் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் ஊடகவியலாளர் சதீஸ்குமார் மேலும் தெரிவித்தார்.




# மன்னாரில் 74 வீத வாக்கு பதிவு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு நிறைவடைந்துள்ள நிலையில் நேற்றைய தினம் வியாழன் 4 மணியுடன் தபால் மூல வாக்களிப்பு உள்ளடங்கலாக 74 வீத வாக்குப் பதிவு இடம் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் 63 ஆயிரத்து 307 பேர் நேற்றைய தினம் வாக்களித்துள்ளனர்.தபால் மூல வாக்களிப்பையும் உள்ளடக்கிய 67 ஆயிரத்து 433 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். இது மொத்த வாக்காளர்களில் 74 வீதமாகக் காணப்படுகின்றது.

வாக்களிப்பு நிறைவு பெற்று வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்கு எண்ணும் நிலையமான மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு கொண்டு வரப்பட்டன. 98 வாக்களிப்பு நிலையங்களில் இருந்தும் வாக்குப் பெட்டிகள் வாக்கு என்னும் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். இரவு 10 மணிக்கு முன்னர் முதலாவது நிலைவரத்தை அறிய தர முடியும் என நேற்றிரவு அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்ற நிலையில் வாக்களிப்புகள் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம் பெற்றது.

வன்னி மாவட்டத்தில் 06 உறுப்பினர்களை தெரிவு செய்ய 432 வேட்பாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.



# வடக்குக் கிழக்கில் சங்கு 10 ஆசனங்களைப் பெறும்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாடாளுமன்றத் தேர்தலில் சங்குச் சின்னத்தைக் கொண்டுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இம்முறை 10 ஆசனங்களுக்கு மேல் பெற்று வெற்றி பெறும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ கட்சியின் தலைவரும், மேற்படி சங்குக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று தேர்தல் சமயம் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

நேற்று நண்பகல் விடத்தல் தீவு புனித ஜோசவாஸ் மகா வித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சங்கு இம்முறை பெரியதொரு வெற்றியை பெறும் என்ற நம்பிக்கை கிடைத்திருக்கின்றது. வடக்குக் கிழக்கில் பெரிதாக ஊதுகின்ற சத்தமாக சங்கின் வெற்றி அமையும். கிட்டத்தட்ட பத்து ஆசனங்களுக்கு மேல் வடக்கு கிழக்கில் சங்கு பெறும்.

இம்முறை அரசாங்கத்தை அமைக்கின்ற வலிமையை நாங்கள் பெறுவோம். மக்கள் அந்த ஆணையை வழங்குவார்கள். அப்போது இந்த புதிய அரசாங்கத்தை வல்லமையோடு ஆதரிக்கின்ற ஒரு முடிவோடு இனப் பிரச்சினையும், பொருளாதாரப் பிரச்சினையும் இணைத்து கொண்டு போகின்ற நிலைப்பாட்டிலே செயற்படுவோம்.

ஆகவே இந்த அரசாங்கத்தை நிபந்தனையுடன் நடத்துவதற்கான வாய்ப்பு மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் 63.44 வீதமான வாக்களிப்பு











**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொட்டும் மழை மற்றும் பலத்த பாதுகாப்புக்கும் மத்தியில் 5 பிரதிநிதிகளைத் தெரிவு செய்தற்காக 2 இலட்சத்து 86 ஆயிரத்து 186 வாக்குகள் அளிக்கப்பட்டன. இதன்படி 63.44 வீதமான வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது. இதுவரை 357 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் 5 பிரதி நிதிகளை தெரிவு செய்வதற்காக 392 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். 442 வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு நேற்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பமாகியது. சீரற்ற காலநிலையினால் கொட்டும் மழைக்கும் மத்தியில் மக்கள் ஆர்வமாகச் சென்று வாக்களித்தனர்.

அதேவேளை தமிழரசுக் கட்சி வேட்பாளர் இரா.சாணக்கியன் பட்டிருப்பு மாகா வித்தியால வாக்குசாவடியிலும், முன்னாள் மாநகரசபை மேயர் தி.சரவணபவன் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலும், ஞா.சிறிநேசன் மட்டு. ஜோசப் வித்தியாலயத்திலும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் த.சுரேஷ் கொக்கட்டிச் சோலை முனைக்காடு சாரதா வித்தியாலயத்திலும், சங்கு சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், இரா.துரைரெத்தினம் ஆகியோர் புனித மிக்கேல் கல்லூரியிலும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் வேட்பாளருமான அருண் தம்பிமுத்து சிசிலியா பெண்கள் பாடசாலையிலும், ரி.எம்.வி.பி. கடசி வேட்பாளரும் முன்னாள் முதலமைச்சருமான சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) பேத்தாளையிலும், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளரான முன்னாள் பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி களுவாஞ்சிக்குடியிலும், முன்னாள் அமைச்சர் அமீர் அலி ஓட்டுமாவடியிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநருமான ஹிஸ்புல்லா காத்தான்குடியிலும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளரான கந்தசாமி பிரபு மாமாங்கத்திலும் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

தேர்தல் கண்காணிப்பு குழுவான கபே அமைப்பு மற்றும் பவ்ரல் அமைப்பு, ட்ரான்பரன்ஸி இன்ரநாஷனல் அமைப்பு மற்றும் சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டன.

தேர்தல் வன்முறைகள் எதுவம் இதுவரை இடம்பெறவில்லை. தேர்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பாக இதுவரை முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் தேர்தல் வன்முறைகள் இன்றி சுதந்திரமா, சுமுகமாக இடம்பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பி.எம். சுபீயான் தெரிவித்தார்.

# சென்னை கிண்டி அரசு மருத்துவமனையில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்பு




சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவரை இளைஞர் ஒருவர் சரமாரியாக கத்தியால் குத்திய சம்பவத்தைத் தொடர்ந்து மருத்துவமனை வளாகத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு உயர் சிறப்பு மருத்துவமனையில் புற்றுநோயியல் பிரிவு மருத்துவர் பாலாஜி, விக்னேஷ் என்ற இளைஞரால் கத்தியால் குத்தி தாக்கப்பட்டார். இந்த சம்பவம் மருத்துவமனை வளாகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழகம் முழுவதும் இச்சம்பவத்தைக் கண்டித்து அரசு மருத்துவர்கள் இன்று பணி புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மருத்துவமனை வளாகத்தில் போதிய பாதுகாப்பு இல்லாததே இந்த தாக்குதலுக்கு காரணம் என்று குற்றம்சாட்டப்பட்டது.

இந்நிலையில், கிண்டி கலைஞர் நூற்றாண்டு நினைவு உயர் சிறப்பு மருத்துவமனையில் நேற்று பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டனர். ஏற்கெனவே, இம்மருத்துவமனையில் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட வந்தனர். இந்த கத்திக்குத்து சம்பவத்தைத் தொடர்ந்து மருத்துவமனை வளாகத்தில் பாதுகாப்பை அதிகரிக்க வலியுறுத்தி கிண்டி மருத்துவமனையில் பணியாற்றும் அரசு மருத்துவர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கிண்டி மருத்துவமனை வளாகத்தில் புறகாவல் நிலையம் அமைக்கப்படும் என்று பொலிஸ் உறுதி அளித்திருந்தது. நேற்று மருத்துவமனை முழுவதும் பொலிஸார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

90 காவலர்கள் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், மருத்துவமனை நுழைவாயில் பகுதியில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும், உரிய அனுமதி சீட்டு இல்லாமல் புறநோயாளிகள் மருத்துவமனைக்குள் அனுமதிக்கப்படவில்லை.

# புதுடில்லியில் மீண்டும் வளி மாசடைந்துள்ளது

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் மீண்டும் வளி மாசடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது டெல்லியின் பல நகரங்கள் நேற்று அடர்ந்த புகை மூட்டத்தால் சூழப்பட்டன.

இதன்படி, நேற்று காலை டெல்லியின் வளி மாசு சுட்டெண் 432 புள்ளியாகக் காணப்பட்டதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டில்லியிலிருந்து புறப்படும் சில விமானங்கள் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சுவாசக்கோளாறு உள்ளவர்கள், நோயாளர்கள் மற்றும் சிறுவர்கள் காற்றின்தரம்குறித்துஅவதானத்துடன்செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.











# தமிழகம் முழுவதும் மருத்துவர்கள் ஆர்ப்பாட்டம்; நோயாளிகள் பாதிப்பு

மருத்துவர் பாலாஜி மீதான தாக்கு தலைக் கண்டித்து தமிழகம் முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில்ஈடுபடப்போவதாகஅறிவித் திருந்தனர்.

இந்நிலையில், தமிழகத்தின் பல்வேறு அரசு மருத்துவமனை முன்பாக மருத்து வர்கள், மருத்துவ மாணவர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், மருத்துவமனைகளுக்கு புறநோயாளிகளாக வந்தவர்கள் பாதிக் கப்பட்டனர்.

இந்த சம்பவத்தை கண்டித்து மருத்து வர்கள் கிண்டி மருத்துவமனையில் நேற்று முன்தினம் தர்ணா போராட்டத் தில் ஈடுபட்டனர். தொடர்ந்து மருத்து வர் மீதான தாக்குதலைக் கண்டித்து, இன்று தமிழகம் முழுவதும் அரசு மற் றும் தனியார் மருத்துவர்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்படி ருந்தது.

அதன்படி, திருச்சி, கோவை, மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட் டங்களில், அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் கறுப்பு பட்டி அணிந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.















### ட்ரம்ப் வெற்றியின் எதிரொலி:

# அமெரிக்காவில் கருக்கலைப்பு மாத்திரை விற்பனை அதிகரிப்பு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் அமோக வெற்றி பெற்றுள்ளார். தேர்தல் முடிவு வெளியான அடுத்த சில மணி நேரங்களில் அந்த நாட்டில் கருத்தடை சார்ந்த சிகிச்சையும், கருக்கலைப்பு மாத்திரை விற்பனையும் அதிகரித்துள்ளது.

கருத்தரிப்பதை நீண்ட காலம் கட்டுப் படுத்தும் சிகிச்சை முறை மற்றும் நிரந்தர கருத்தடை குறித்த கேள்விகள், சந்தேகங்கள் தேர்தலுக்குப் பிறகு நாடு முழுவதும் அதிகரித்துள்ளது என அமெரிக்க நாட்டு ஊடக நிறுவனங்களிடம் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதோடு கருத்தடை மற்றும் கருக் கலைப்புக்கு உதவும் மாத்திரை விற்பனையும் அதிகரித்துள்ளது என மருந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

வழக்கத்துக்கும் மாறாக அதிகளவில் கருத்தடை மற்றும் கருக்கலைப்பு மாத்திரைகளை வாங்கி மக்கள் இருப்பு வைத்துக் கொள்வதாக தகவல் கிடைத்துள்ளது. அதாவது தேர்தல் முடிவுகள் வெளியான 60 மணி நேரத்தில் இந்த மாத்திரைகளின் விற்பனை, அதற்கு முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 966 சதவீதம் அங்கு அதிகரித்துள்ளது. ஐ.யு.டி. சிகிச்சை குறித்தும் மருத்துவர்களிடம் மக்கள் கேட்டு வருகின்றனர்.

ட்ரம்ப், தனது இரண்டாவது ஆட்சி காலத்தில் கருக்கலைப்பு விதிகளை கடுமையாக்குவார் என தெரிகிறது. இது அவரது தேர்தல் பரப்புரையிலும் முக்கிய இடம் பிடித்தது. அதனால் அவரது வெற்றிக்கு பிறகு மக்கள் தற்போது அச்சத்தில் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதிக்கு பிறகே கருக்கலைப்பு சார்ந்து அமெரிக்காவில் என்ன மாதிரியான கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வருகிறது என்பது தெரியவரும்.

# அமெரிக்க உளவுத்துறை இயக்குநராக துளசி கப்பார்ட் நியமிக்கப்பட்டார்

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகி உள்ள டொனால்ட் ட்ரம்ப், அந்நாட்டின் உளவுத்துறை இயக்குநராக துளசி கப்பார்டை தேர்வு செய்துள்ளார்.

“துளசி குறித்து நான் அறிவேன். அவரது அச்சமற்ற மனப்பான்மையை நமது உளவுத்துறைக்கு கொண்டு வருவார் என்று நம்புகிறேன். நமது அரசமைப்பு உரிமைகளை வென்றெடுப்பார், அமைதியை நிலைநாட்டுவார்.” என ட்ரம்ப் கூறியுள்ளார் என அமெரிக்க ஊடக நிறுவனம் தெரிவித்துள்ளது.

ட்ரம்ப் தனது இரண்டாவது ஆட்சியில் நிர்வாக பொறுப்புகளை கவனிப்பவர்கள் குறித்த அறிவிப்பை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். அந்த வகையில் துளசி கப்பார்டை உளவுத்துறை இயக்குநராக அவர் அறிவித்துள்ளார்.



43 வயதான துளசி கப்பார்ட் அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தில் இருந்து ஜனநாயக கட்சி சார்பில் 4 முறை எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டவர். அமெரிக்காவின் முதல் இந்து எம்.பி. இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் அல்ல. கடந்த 1981 இல் அமெரிக்காவில் பிறந்தவர். அவரது குடும்பத்தினர் இந்து மதத்துக்கு மதம் மாறியுள்ளனர். அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றி உள்ளார்.

கடந்த 2022 இல் ஜனநாயக கட்சியில் இருந்து விலகினார். நடப்பு ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியை சேர்ந்த டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவு தெரிவித்தார். தொடர்ந்து தேர்தல் பிரச்சாரத்தில் ட்ரம்புக்கு ஆதரவாக பேசினார். தனது பரப்புரையில் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை விமர்சித்தார். அது ட்ரம்ப் வெற்றிக்கு உதவியது. இந்நிலையில், உளவுத்துறை இயக்குநராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஹிஸ்புல்லா அமைப்புடன் மோதல் இஸ்ரேல் படையினர் ஆறு பேர் பலி



ஹிஸ்புல்லா அமைப்பினருடனான மோதலில் தமது தரப்பில் ஆறு படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த தாக்குதலில் மேலும் ஒரு சிப்பாய் காயமடைந்துள்ளார்.

தெற்கு லெபனானில் இடம்பெற்ற மோதலின்போதே இந்த இழப்புகள் பதிவாகியுள்ளது.

கடந்த செப்டம்பர் பிற்பகுதியில் ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக தொடங்கிய படை நடவடிக்கையில் இஸ்ரேல் படைக்கு ஒரே நாளில் ஏற்பட்ட இரண்டாவது மிகப்பெரிய இழப்பு இதுவென தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் அனைவரும் கோலானி படைப்பிரிவின் 51 ஆவது பட்டாலியனில் பணியாற்றியதாக இஸ்ரேல் படைத் துறை வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி ஒரே நாளில் 08 படையினர் கொல்லப்பட்டதே இஸ்ரேல் படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு என்பது குறிப்பிடத்தக்கது.





# இன்றைய ராசி பலன்கள் - 15.11.2024




வாழ்வில் முன்னேறுவதற்கு உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமை மற்றும் அமைதி மேற் கொண்டால் எல்லாம் சரியாகி விடும். இன்று சமாளிப்பதில் சற்று சிரமம் காணப்படும்.

பிறருடன் பழகும் போது பொறுமை அவசியம். அமைதி யுடன் நடந்து கொண்டால் அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணை விரும்பும் வகையில் நடந்து கொள் வீர்கள்.ஒருவருக்கொருவர் அனுசரனையாக நடந்து கொண்டால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இல்லாவிடி னும் கவலை வேண்டாம். எதிர்பாராத பண வரவைக் கொண்டு உங்கள் செலவை சமாளிப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக நீங்கள் இன்று செயல்களை விரைந்து முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் நீண்ட காலப் பயன் தருவனவாக இருக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.உங்களிடம் சிறப்பு தகுதி காணப்படும் அதனை நன்கு பயன்படுத் திக் கொள்ள வேண்டும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இருவரும் மகிழ்வுடன் காணப்படுவீர்கள். உங்களின் உறவு சிறப்பாக இருக்கும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாக இருந்தால் கவனமாக செயலாற்றலாம். மகிழ்ச்சிக்கான மந் திரம் இதுவே.

உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி நன்கு திட்டமிட வேண்டும்.இன்று பணிகள் சிறிது அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நில வும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். செலவும் காணப்படும் என்றாலும் அது பயனுள்ளதாக இருக் கும்.

இன்று நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத் திருக்க வேண்டும். தேவையின்றி பதட்டப்பட வேண்டாம். அது உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.




நம்பிக்கையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.இதனால் எல்லாவித மான பிரச்சினைகளையும் சமாளிக்க லாம். உங்கள் மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக இருப்ப தாக உணர்வீர்கள். பணிகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி ஆற்றுங்கள். இன்று நேரத்தோடு செயல்பட வேண்டியது அவசியம்.

நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் மேம்படும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய நேரும். என்றாலும் உங்கள் தேவைகளை சமாளிக்கும் வகையில் உங்கள் பணப்புழக்கம் காணப்படும்.

இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.




நேர்மறை எண்ணம் மற்றும் நட்பான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள். இதனால் வெற்றியும் நன்மதிப்பும் கிடைக்கும். எதிர்மறை எண்ணத்தை தவிர்த்திடுங்கள்.

உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும். கவனமின்றி செயல்பட்டால் பணியும் தரம் குறையும். அதன் விளைவாக உங்கள் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையின் அனுசரணை கிடைப்பது இயலாது என்பதனால் நீங்கள் இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். யதார்த்தமான உங்கள் அணுகுமுறை உங்கள் துணையை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

நிதிநிலைமை சற்று மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைக்க வேண்டும். இதன் மூலம் நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.




இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப் படுவீர்கள். பயனுள்ள செயல்களுக்கு அதனை பயன்படுத்துங்கள்.இன்று சௌகரியமாக இருப்பீர்கள்.

உங்கள் பணி இன்று தரமானதாக இருக்கும். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்பட்டு அனைவரின் பாராட்டையும் பெறும்.

சிறந்த தகவல் தொடர்பால் உங்கள் துணை மகிழ்ச்சி யடைவார். உங்கள் இருவருக்குமிடையே மகிழ்ச்சியான இனிமையான தருணங்கள் காணப்படும்.

இன்று கடன்கள் பெற்று உங்கள் பணத் தேவை களை சமாளிப்பீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் உய ரும்.

இன்று திடமான ஸ்திரமான ஆரோக்கியம் காணப் படும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் பேச்சில் தெளிவு காணப்படும். உங்கள் பேச்சாற்றல் மூலம் சாதிப்பீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் குழப்பம் காரணமாக பணியில் கவனம் செலுத்த இயலாது. சகபணியாளர்க ளுடன் பொறுமையாக பழக வேண்டும். பணியை குறித்த நேரத்தில் முடிப்பதற்கு முன்னுரிமை அளியுங்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ளுங்கள். உங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

நிதிநிலைமையை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். செலவுகளை நிர்வகிக்க தெரிந்துகொண்டு அதிகம் செலவழிக்காமல் இருக்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று சிறப்பாக யோசித்து செயல் பட வேண்டியது அவசியம். தேவையற்ற எண்ணங்களை மனதில் கொள்ளா தீர்கள்.

பணியிடத்தில் இன்று கூடுதல் பொறுப்புகள் காணப்படும். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்வதன் மூலம் அமைதி காணலாம்.

இன்று காதலில் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணை உங்களிடம் புரிந்துணர்வுடன் இருப்பார். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. என்றாலும் உங்களிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு இன்றைய தினத்தை சமாளிக்கலாம்.

உணர்ச்சிவசப்படுதலும் பாதுகாப்பற்ற உணர்வும் தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.11.2024




ஆரம்பத்தில் சில தடைகள் காணப்படும். உங்களின் தைரியத்தைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் அவசியம். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

இன்று கவனமாக பணியாற்ற வேண்டும். தேவையற்ற சஞ்சலங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்.சிறப்பாக செயலாற்றுங்கள்.

தன்னுடைய விருப்பப்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று உங்கள் துணையின் எதிர்ப்பார்ப்பு காணப்படும். அதற்கு முயன்றால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று அதிக பணம் காணப்படாது. உங்களிடம் இருக்கும் பணம் தேவையை விட அதிகமாக இருக்கும்.

இன்று முன்னெச்சரிக்கையாக உங்கள் கண்களுக்கும் பல்லிற்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால் பதட்டம் காணப்பட்டாலும் உங்களிடம் மகிழ்ச்சியும் காணப்படும். விருப்பமான வெளியிடங்களுக்கு செல்வது ஆறுதலைத் தரும்.

நம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்த சவால்களையும் எதிர் கொள்ளும் மன நிலை உருவாகும். அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையின் உதவியுடன் விரைந்து முடிவெடுக்க விரும்புவீர்கள். நல்ல தொடர்பு காணப்படும். முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். வாழ்வில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத விதமாக இன்று உங்களுக்கு பண வரவு அதிகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான பிணைப்பு முன்பிருந்ததை விட இப்பொழுது அதிகமாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். உங்களின் பணம் சம்பாதிக்கும் திறன் இன்று அதிகரித்தும் பக்குவப்பட்ட நிலையிலும் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள். இது வெற்றியை அளிக்கும். பிரார்த்தனை மூலம் மன அமைதி பெறுவீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். பணியில் கவனம் செலுத்தினால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் உறவின் தரத்தை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். வேறுபாடுகளைக் களைந்து புரிந்துணர்வுடன் செயல்பட்டால் நல்லுறவை ஏற்படுத்த முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். குறைவாக செல்வழிக்க வேண்டும். சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.

குளிர்ச்சியான உணவு வகைகள் காரணமாக ஒவ்வாமை ஏற்படும் என்பதால் உணவு மற்றும் நீரில் கவனம் தேவை.





